## 1. நாலடியார்

- வேளாண்வேதம், நாலடி நானூறு என்றும் வழங்கப்படும் நூல்.
- பாண்டிநாட்டுச் சமணமுனிவர்கள் இயற்றியது.
- தொகுத்தவர் பதுமனார்.
- அதிகாரம் வகுத்தவர் பதுமனார்.
- முப்பாலாகப் பகுத்தவர் தருமர்.
- உரைகண்டவர்கள் பதுமனாரும், தருமரும்
- அறத்துப்பால் 13 அதிகாரம், பொருட்பால் 24 அதிகாரம், காமத்துப்பால் 3 அதிகாரம்.
- நாலடியாரில் மொத்தம் 40 அதிகாரங்களும் இயல்களும் உள்ளன.
- துறவறவியல் முதலில் உள்ளது.
- பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார்.
- முத்தரையரைப் பற்றிக் கூறும் நூல் நாலடியார்.
- கீழக்கணக்கில் திருக்குறளுக்கு அடுத்துப் புகழ்பெற்ற நூல் நாலடியார்
- **"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி**
  **நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"**

  **"பழகு தமிழ் சொல்லருமை நூல் இரண்டில்"**

  இவற்றுள் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
- நாலடியாரை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**இன்றியமையா மேற்கோள்கள்**

**"குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல........**
**கல்வி அழகே அழகு"**

**"கல்வி கரையில: கற்பவர் நாள்சில"**

**ஆராய்ந்த அமைவுடைய கற்பவே,**

**"நீர் ஒழியப் பால்உண் குருகின் தெரிந்து"**

**"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**
**வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்**
**வானூர் மதியம் போல் வைகலும் தேயுமே**
**தானே சிறியார் தொடர்பு"**



## 2. நான்மணிக்கடிகை

- கடிகை என்றால் துண்டு (பகுதி) என்று பொருள், கட்டுவடம் (Neckless) என்ற பொருளும், ஆபரணம் என்ற பொருளும் உண்டு.
- ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான கருத்துகள் கூறப்பட்டுள்ளன.
- ஆசிரியர் விளம்பிநாகனார். இவர் வைணவர்.
- 4ஆம் நூற்றாண்டு
- மொத்தம் 104 பாடல்கள்.
- ஜி.ஃ.யு.போப் இரண்டு பாடல்களை (7,100) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**இன்றியமையா மேற்கோள்கள்**

- **"யார் அறிவார் நல்லாள் பிறக்கும் குடி"**
- **"இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசைநடுக**
  **தன்னோடு செல்வது வேண்டின் அறம் செய்க**
  **வெல்வது வேண்டின் வெகுளிவிடல்"**
- **"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்**
  **வளமில்லாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்"**
- **"ஈன்றாளோடு எண்ணக கடவுளும் இல்"**
  **"கொண்டானிற் சிறந்த கேளிர் பிறர்இல்"**
- **"மனைக்கு விளக்கம் மடவான்**
  **மடவாளுக்கு விளக்கம் புதல்வர்**
  **புதல்வர்க்கு விளக்கம் கல்வி**
  **கல்விக்கு விளக்கம் புகல்சால் உணர்வு (ஒழுக்கம்)"**
- **"நிலத்துக்கு அணி நெல்லும் கரும்பும்**
  **குளத்துக்கு அணி தாமரை**
  **பெண்ணுக்கு அணி நாணம்"**

## 3. இன்னாநாற்பது

- ஆசிரியர் கபிலர்.
- சைவர்.
- 4ஆம் நூற்றாண்டு.
- மொத்தப் பாடல்கள் 40 (இன்னிசை வெண்பாக்கள்).
- துன்பம் கொடுக்கும் செயல்களைத் தொகுத்துக் கூறும் நூல்.
- மொத்தம் 164 இன்னாச் செயல்கள் கூறப்பட்டுள்ளன.

**இன்றியமையா மேற்கோள்**

- **“உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்புஇன்னா”**
- **“தீமையுடையார் அருகில் இருத்தல் இன்னா”**
- **“ஊனைத் தின்று ஊனைப்பெருக்கல் முன்னின்னா”**
- **“குழவிகள் உற்றபிணி இன்னா”**
- **“இன்னா பொருள் இல்லார் வண்மை புரிவு “**

## 4. இனியவை நாற்பது

- ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்.
- சமயம்: சைவர்
- காலம்: 5ஆம் நூற்றாண்டு
- மொத்தப்பாடல்: 40
- இதன் கடவுள் வாழ்த்து சிவன், திருமால், பிரமன் என்ற மூவரையும் வணங்குகிறது
- இவை இவை இனிமை என்று அறங்களைத் தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன.
- மொத்தம் 124 இனிய செயல்கள் கூறப்பட்டுள்ளன.
- பெண்ணை இழிவுபடுத்தி நஞ்சாகக் கருதும் வழக்கத்தை முதன் முதலாகக் கூறிய நூல் இனியவை நாற்பது

**இன்றியமையா மேற்கோள்:**

- **“ஊனைத்தின்று ஊனைப்பெருக்காமை முன்இனிதே”**
- **“ஒப்பமுடிந்தால் மனைவாழ்க்கை முன் இனிது”**
- **“வருவாய் அறிந்து வழங்கல் இனிது”**
- **“தடமென் பணைத் தோள் தளிர் இயலாரை விடமென்று உணர்தல் இனிது”**

## 5. கார்நாற்பது

- ஆசிரியர் மதுரைக் கண்ணன் கூத்தனார்.
- 5ஆம் நூற்றாண்டு.
- 40 வெண்பாக்கள்.
- அகநூல்.
- பதினெண்கீழக்கணக்கு நூல்களுள் ஒருதிணையை (முல்லை) மட்டும் பாடிய நூல்.
- முல்லைத் திணை ஒழுக்கமாகிய இருத்தல் பற்றிக் கூறுகிறது.



- ஒவ்வொரு பாடலிலும் கார்கால வருணனை வருகிறது.
- தலைவன், தலைவி, தோழி, பாங்கன் என்ற நால்வர் மட்டுமே இதனுள் வருகின்றனர்.
- பதினெண்கீழக்கணக்கில் உள்ள அக நூல்கள் ஆறனுள் மிகச் சிறியது.
- நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் இந்நூலில் இருந்து சான்று காட்டியுள்ளார்.

**மேற்கோள்**

**“செல்வர் மனம்போல் கவின் ஈன்ற, நல்கூர்ந்தார்**
**மேனிபோல் புல் என்ற காடு”**

**“தூதோடு வந்த மழை”**

**“பாடுவண்டு ஊதும் பருவம் பணைத்தோளி**
**வாடும் பசலை மருந்து”**

**“கெடாஅப் புகழ்வேட்கை செல்வர் மனம் போல்**
**புடாஅ மகிழ்வண்டு பண்முரலும்”**

## 6. களவழி நாற்பது

- ஆசிரியர் : பொய்கையார்
- இலக்கிய வரலாற்றில் நான்கு பொய்கையார் உள்ளனர்
- சேரமன்னன் கோக்கோதை மார்பனைப் பாடிய சங்காலப் பொய்கையார்
- பதினெண்கீழக்கணக்கில் களவழி நாற்பது, இன்னிலை என்ற நூல்களை இயற்றிய பொய்கையார்.
- நாலாயிரத்திவ்வியபிரபந்தத்தில் முதலாம் திருவந்தாதி பாடிய முதல் ஆழ்வாராகிய பொய்கையாழ்வார்
- பன்னிரு பாட்டியல் என்ற பாட்டியல் நூலில் சில நூற்பாக்களை இயற்றிய பொய்கையார்
- மொத்தம் 40 பாடல்கள்
- பதினெண்கீழ்க் கணக்கில் புறப்பொருள் பற்றிக் கூறும் ஒரே நூல்
- 40 பாடல்களிலும் களம் என்ற சொல் வருவதால் இந்நூல் களவழி நாற்பது என்று பெயர் பெற்றது.
- களம் பாடுவதில் போர்க்களம் பாடுதல், ஏர்க்களம் பாடுதல் என இருவகை உண்டு. இது போர்க்களம் பாடியது.
- ஒவ்வொரு பாடலும் அட்டகளத்து (அ) பொருதகளத்து என முடிகிறது.
- இந்நூல் சோழனைச் சிறப்பிக்கிறது.
- சோழனால் சிறையில் அடைக்கப்பட்ட சேரனை விடுவிக்கப் பாடப்பட்ட நூல் என்றும் கூறுவர்.

- இந்நூலில் குறிக்கப்படும் மன்னர்கள்: சோழன் செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறை.
- இருவருக்கும் போர் நிகழ்ந்த இடம் கழுமலம்.
- சேரன் சிறையில் அடைக்கப்பட்ட இடம் குடவாயிற் கோட்டம்.
- இச்சேரன் தான் நீர்கேட்டுத் தாமதமாகப் பெற்று மானம் கருதி உயிர்விட்டவன்.
- இச்சேரன் தான் **"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்"** என்ற புறநானூற்றுப் பாடலை எழுதியவன்.
- இந்நூல் நால்வகைப் படையுள் யானைப் போரைச் சிறப்பித்துக் கூறுகிறது.
- கார்த்திகைத் திருவிழா குறித்து இந்நூல் கூறுகிறது.
- கலிங்கத்துப்பரணி போன்ற பிற்கால நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்த நூல் களவழி நாற்பது.

**மேற்கோள்:**

**"கடிகாவில் காற்று உற்று எறிய, வெடிபட்டு**
**வீற்று வீற்று ஓடும் மயிலினம் போல் நாற்றிசையும்**
**கேளிர் இழநிதார் அலறபவே, செங்கண்**
**சினமால் பொருத களத்து"**

## 7. ஐந்திணை ஐம்பது

- ஆசிரியர் : மாறன் பொறையனார்.
- 4-ஆம் நூற்றாண்டு.
- அகநூல்.
- திணைக்குப் 10 பாடலாக மொத்தம் 50 பாடல்கள் உள்ளன.
- முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற வைப்பு முறையை உடையது.
- முல்லைத் திணையை முதலாகக் கொண்ட கீழக்கணக்கு நூல் இது மட்டுமே ஆகும்.

**மேற்கோள்:**

**"வெஞ்சுடர் அன்னானையான் கண்டேன் கண்டானாம்**
**துண்சுடர் அன்னானைத் தான்"**

**"சுனைவாய்ச் சிறுநிரை எய்தாது என்ற எண்ணிப்**
**பிணைமான் இனிது உண்ண வேண்டிக் - கலைமான்தன்**
**கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்**
**ஊள்ளம் படர்ந்த நெறி"**



## 8. ஐந்திணை எழுபது

- ஆசிரியர்: மூவாதியார்.
- சமயம்: சைவர்.
- காலம்: 5ம் நூற்றாண்டு.
- அகநூல்
- திணைக்குப் 14 பாடலாக மொத்தம் எழுபது பாடல்கள் உள்ளன.
- குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற வரிசையை உடையது.

**மேற்கோள்:**

**"நன்மலை நாட! மறவல் வயங்கிழைக்கு**
**நின்னலது இல்லையால் ஈயாயோ கண்ணோட்டத்து**
**இன்னுயிர் தாங்கும் மருந்து"**

## 9. திணைமொழி ஐம்பது

- ஆசிரியர்: கண்ணன் சேந்தனார்.
- காலம்: 5-ஆம் நூற்றாண்டு.
- அகநூல்.
- திணைக்குப் பத்துப் பாடலாக 50 பாடல்கள் உள்ளன.
- 46 பாடல்கள் இன்னிசை வெண்பா.
- குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையை உடைய நூல்.

**மேற்கோள்**

**"அரிபாரந்த உண்கண்ணாள் ஆற்றாமை நும்மின்**
**தெரிவார்யார் தேடும் இடத்து"**

**"துணிகடல் சேர்ப்பன் துறந்தான்கொல் தோழி !**
**தணியும் என்தோள் வளை"**

## 10. திணைமாலை நூற்றைம்பது

- ஆசிரியர் : கணிமேதாவியார்.
- சமயம்: சமணர்
- ஏலாதி என்ற நூலை இயற்றியவரும் இவரே
- அகநூல்
- திணைக்கு 30 பாடலாக 150 பாடல்கள் உள்ளன
- குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையை உடைய நூல்.
- இந்நூற் கருத்துக்கள் சுந்தரர் தேவாரத்திலும் மாணிக்கவாசகரின் திருக்கோவையாரிலும் இடம் பெற்றுள்ளன.

மேற்கோள்:

**“ஒரு சுடரும் இன்றி உலகு பாழாக**
**இருசுடரும் போந்தன என்றார்”**
**“பொருள் பொருள் என்றால் சொல்**
**போன்போலப் போற்றி**
**அருள் பொருள் ஆகாமையாக - அருளால்**
**வளமை கொணரும் வகையினால் மற்றோர்**
**இளமை கொணர இசை”**
**“நாள்வேங்கை பொன்விளையும் நன்மலைநன்நாட”**
**கோள்வேங்கை போல்கொடியார் என்ழயன்மார், - கோள்வேங்கை**
**அன்னையால் நீயும், அருந்தழையாம் ஏலாமைக்கு**
**என்னையோ? நாளை எளிது”.**

## 11. முப்பால் - (திருக்குறள்)

- முப்பால் என்பது திருக்குறள்.
- உத்திரவேதம், தெய்வ நூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவப் பயன், திருவள்ளுவம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- ஆசிரியர் திருவள்ளுவர்.
- வள்ளுவநாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதாநுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவன் என்ற வேறு பெயர்களும் இவருக்கு உண்டு.
- அதிகாரம் 133.
- மொத்த பாடல்கள் 1330. அனைத்தும் குறள் வெண்பாக்கள்.
- அறத்துப்பால் 38 அதிகாரங்களை உடையது (பாயிர இயல் 4, இல்லறவியல் 20, துறவியல் 13, ஊழியல் 1)
- பொருட்பால் 70 அதிகாரங்களை உடையது (அரசியல் 25, அங்கவியல் 32, குடியியல் 13)
- காமத்துப்பால் 25 அதிகாரங்களை உடையது.
- (களவியல் 7, கற்பியல் 18) 38+70+25 = 133 அதிகாரங்கள்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அதிகப் பாடல்களையும் அடிகளையும் கொண்ட நூல் திருக்குறள்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அதிக அறங்களைச் சொல்லும் நூல் திருக்குறள்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் செய்யுளால் (பாவால்) பெயர்பெற்ற ஒரே நூல் திருக்குறள்.



- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் குறள் வெண்பாவால் ஆனது.
- “அ”கரத்தில் தொடங்கி “ன”கரத்தில் முடியும் நூல்.
- திருக்குறளின் சிறப்பை எடுத்துக்கூறும் நூல் திருவள்ளுவமாலை.
- சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா, குமரேச வெண்பா போன்றனவும் குறளின் சிறப்பையே கூறுகின்றன.
- திருக்குறளை முதல் முதலாகப் பதிப்பித்தவர் அம்பலவாணத்தம்பிரான், 1812.
- பரிமேலழகர் உரையுடன் முதல் முதலாகத் திருக்குறளைப் பதிப்பித்தவர், இராமாநுஜ கவிராயர், 1840

உரைகள்:

- **தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் என்ற பத்துப்பேரும் முதலில் உரை கண்டவர்கள் ஆவர்.**
- பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது ஆகும்.
- மணக்குடவர், பரிமேலழகர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய ஐவரின் உரை மட்டுமே கிடைத்துள்ளது.
- இராமானுஜக் கவிராயர், திரு.வி.க., நாமக்கல் இராமலிங்கனார், சரவண பெருமாள் ஐயர், தண்டபாணி தேசிகர், அரசஞ் சண்முகனார், புலவர் குழந்தை, பாரதிதாசன், மு.வரதராசனார், நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர் பிற்காலத்தே உரை எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.
- திருக்குறள் உரைவளம் - தருமபுர ஆதீன வெளியீடு, ஐவரின் பழைய உரை.
- திருக்குறள் உரைக் கொத்து - திருப்பனந்தாள் வெளியீடு, ஐவரின் பழைய உரையுடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் சேர்ந்தது.
- திருக்குறள் உரைக்களஞ்சியம் - மதுரைப் பல்கலைக்கழக வெளியீடு.
- திருக்குறள் உரைவளம் - தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக்களஞ்சியம் - தண்டபாணி தேசிகர் திருக்குறள் நுண்பொருள் மாலை - காரி ரத்தினக் கவிராயர்.
- திருவள்ளுவ மாலை - பலர் பாடியது.
- திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு - கி.வா.ஜகந்நாதன்
- வள்ளுவம் - வ.சுப.மாணிக்கம்.

- வாழும் வள்ளுவம் - வ.செ.குழந்தைசாமிஈ வள்ளுவர் கண்ட நாடும் காலமும் - தெ.பொ.மீ.
- திருக்குள் மணிவிளக்க உரை (பெரு விளக்க நூல்) - க.அப்பாதுரையார்.
- திருக்குறள் நடையியல் - இ.சுந்தரமூர்த்தி.
- சொல்வலை வேட்டுவர் - இ.சுந்தரமூர்த்தி.

**மொழிபெயர்ப்பு:**

- லத்தீன் - வீரமாமுனிவர்.
- ஜெர்மன் - கிரால்.
- ஆங்கிலம் - ஜி.யு.போப்.
- பிரெஞ்சு - ஏரியல்.
- வடமொழி - அப்பையதீட்சதர்.
- இந்தி - பிடி.ஜெயின்.
- தெலுங்கு - வைத்யநாத பிள்ளை.
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இந்தியர் கே.எம்.பாலசுப்பிரமணியம்

**மேற்கோள்.**

**"அறந்தான் வருவதே இன்பம்"**
**"மனத்துக்கண் மாசிலன் ஆகுதல் அறம்"**
**"திருவேறு தெள்ளியராதலும் வேறு"**
**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள்"**
**"ஊழிற் பெருவலி யாவுள"**
**"முயற்சி திருவினை யாக்கும்"**
**"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**சேயற்கரிய செய் கலாதார்"**
**"இடுக்கண் வருங்கால் நகுக"**
**"ஒன்றாக நல்லது கொல்லாமை அதன்**
**பின்சாரலப் பொய்யாமை நன்று"**
**"கனியிருப்பக் காய் கவர்ந்தற்று**
**"பண்புடையார் பட்டுண்டு உலகு"**
**"அன்பிறக்கம் உண்டோ அடைக்கும் தாழ்"**
**"அறிவு அற்றம் காக்கும் கருவி"**
**"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்"**
**"அறிதோறும் அறியாமை கண்டற்றால்"**
**"யானையால் யானையாத்தற்று"**



## 12. திரிகடுகம்

- மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல்.
- திரி என்றால் மூன்று. கடும் என்றால் காரம் உள்ளது என்று பொருள் அவை
- சுக்கு, மிளகு, திப்பிலி.
- ஆசிரியர் : நல்லாதனார்.
- சமயம்: வைணவர்.
- 100 பாடல்கள் உள்ளன
- ஒவ்வொரு பாடலும் மூன்றாம் அடியில் "இம் மூன்றும்" (அல்லது) "இம் மூவர்" என வருகிறது

**மேற்கோள்:**

**"நெஞ்சம் அடங்குதல் வீடாகும்"**
**"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்"**
**"தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்"**
**"நிறை நெஞ்சம் உடையானை நல்குரவு அஞ்சும்"**
**"நட்பின் கொழுமுனை பொய் வழங்கின் இல்லாகும்"**
**"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி"**
**"நூல்விருந்து ஓம்பலின் நட்டாளாம்: வைகலுதம்**
**இல்லறம் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்**
**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்று**
**கற்புடையாள் பூண்ட கடன்"**

## 13. ஆசாரக்கோவை

- ஒழுக்கங்களை அடுக்கிக் கூறும் நூல்.
- ஆசிரியர் பெருவாயில் முள்ளியார்.
- சைவர்.
- அன்றாட வாழ்க்கையில் செய்யும் சிறுசிறு செயல்களையும் எந்த முறையில் செய்ய வேண்டும் என்று விரிவாகக் கூறும் நூல்.
- குறள்வெண்பா சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப∴றொடை வெண்பா எனப் பலவும் கலந்த நூல்.

**மேற்கோள்:**

**"விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை இவர்க்கு ஊண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்"**
**"ஒழுக்கம் பிழையா தவர்"**

**"கைப்பன எல்லாம் கடை, தலை தித்திப்பு மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத் துய்க்க முறைவகையால் ஊண்"**
**"பல் தெற்கு நோக்கார் இராவடக்கு நேசாக்கார்**
**பகற்பொய்யார் தீயுனுள் நீர்"**
**"உமிழ்வும் உயர்ந்துழி ஏறலும் பாக்கும் வகையில்**
**உரையும் வளர்ச்சியும் ஐந்தும் பணரார் பெரியார் அகத்து"**

## 14. பழமொழி நானூறு

- ஆசிரியர்: முன்னுறை அரையனார்.
- சமயம்: சமணர்.
- 34 அதிகாரங்களில் 400 பாடல்களைக் கொண்டது.
- ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி உள்ளது.
- இதன் பழமொழிகள் அனைத்தும் இலக்கியப் பழமொழிகள் ஆகும்.
- தொல்காப்பியர் பழமொழியை "முதுசொல்" என்று குறிப்பிடுகிறார்.
- சங்ககால மன்னர்கள், புலவர்கள், மூவேந்தர்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்ட நூல்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் வரலாற்றை மிகுதியாகத் தரும் நூல்.
- நீதி நூல்களுள் திருக்குறள், நாலடியாருக்கு அடுத்தப் புகழ்பெற்ற நூல்.

**மேற்கோள்:**

**"அணியெல்லாம் ஆடையின் பின்"**
**"இறைதோறும் ஊறும் கிணறு"**
**"கடன்கொண்டும் செய்வார் கடன்"**
**"கற்றலின் கேட்டலே நன்று"**
**"குலவிச்சைக் கல்லாமல் பாகப் படும்"**
**"குன்றின் மேல் இட்ட விளக்கு"**
**"தனிமரம் காடாதல் இல்"**
**"திங்களை நாய்க்குரைத் தற்று"**
**"நிறைகுடம் நீர்த் ததும்பல் இல்"**
**"நுணலும் தன் வாயால் கெடும்"**
**"பாம்பறியும் பாம்பின்கால்"**
**"முறைக்கு மூப்பு இளமைஇல்"(கரிகாலன்)**



## 15. சிறுபஞ்சமூலம்

- **மருந்தால் பெயர் பெற்ற நூல்.**
- பஞ்சம் என்றால் ஐந்து என்று பொருள்.
- மூலம் என்றால் வேர் என்று பொருள்.
- வேரால் பெயர் பெற்ற நூல்.
- ஐந்து வேர்களான: கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், சிறுநெருஞ்சி வேர்.
- ஆசிரியர் காரியாசான்.
- சமணர்.
- மொத்தம் 102 பாடல்கள்.
- தோல்கன்றைக் காட்டிப் பசுவைக் கறக்கும் பழக்கம் கொடியது என்று கூறுகிறது.

**மேற்கோள்:**

**"நூற்கு இயைந்த சொல்லின் வனப்பே வனப்பு"**
**"பேதைக்கு உரைத்தாலும் செல்லாது உணர்வு"**

## 16.முதுமொழிக்காஞ்சி

- ஆசிரியர்: கூடலூர் கிழார்.
- காலம்: 5-ம் நூற்றாண்டு.
- ஐங்குறுநூற்றைத் தொகுத்தவரும் கூடலூர் கிழாரே ஆவார்.
- மொத்தம் 100 பாடல்கள் உள்ளன.
- பத்துப்பிரிவும், பிரிவுக்குப் பத்துப்பாடலுமாக உள்ளது.
- சிறந்தபத்து, அறிவுப்பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, இல்லை பத்து, பொய்யப்பத்து, எளியபத்து, நல்கூர்ந்தபத்து, துண்டாப்பத்து.
- ஒவ்வொரு பத்தும் "ஆர்கலி உலகத்து" என்று தொடங்குகிறது.
- இதன் பாடல்கள் குறள்வெண் செந்துறை என்ற யாப்பால் ஆனவை.
- நிலையாமையைப் பாடும் நூல்.
- காஞ்சி என்ற புறத்திணையால் செய்யப்பெற்ற நூல்.

**மேற்கோள்:**

**"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிலற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"**
**"வண்மையிற் சிறந்தன்று வாய்மை உடைமை"**

**"மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை"**
**"இளமையிற் சிறந்தன்று மெய்பிணி இன்மை"**
**"இசையிற் பெரியதோர் எச்சம் இல்லை"**
**"ஈரம் உடைமை ஈகையின் அறிப"**
**"நலன் உடைமையின் நாணு சிறந்தன்று"**
**"குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று"**
**"அறியாத தேயத்து ஆசாரம் பழியார்"**

## 17. ஏலாதி

- மருந்தால் பெயர் பெற்ற நூல்.
- ஏலாதி என்பதற்கு "ஏலத்தை முதலாக உடையது" என்று பொருள்.
- ஏலம், இலவங்கம், சிறுநாவற் பூ (தக்கோலம், நாககேசரம்) சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறும் ஏலாதி எனப்படும்.
- மொத்தம் 80 பாடல்கள் உள்ளன.
- ஒவ்வொரு பாடலிலும் ஆறு கருத்துகள் இடம் பெற்றுள்ளன.
- ஆசிரியர் : கணிமேதாவியார்.
- திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியரும் இவரே.
- சமயம்: சமணர்.
- உணவு கொடுத்து ஆதரிப்போர் பெருவாழ்வு பெறுவர் என்பதை 21 பாடல்களில் கூறும் நூல்.
- முற்பிறவியில் மாணவர்களுக்கு உணவு, உடை, எழுத்தாணி, புத்தகம் போன்றன கொடுப்போர் இப்பிறவியில் புலவர் போற்றும் வண்ணம் வாழ்வர்.

**மேற்கோள்:**

**"தாய்இழந்த பிள்ளை தலைஇழந்த பெண்டாட்டி**
**வாய்இழந்த வாழ்வினார், வணிகம் போய்இழந்தார்**
**ஐகத்தூண்பொருள் இழநிதார் கண்இலவர்க்கு ஈந்தார்**
**ஐவத்து வழற்கிவாழ் வார்"**

## 18. கைந்நிலை

- அகநூல்.
- ஆசிரியர்: புல்லங்காடனார்.
- மொத்தம் 60 பாடல்கள்.
- இந்நூலுக்கு ஐந்திணை அறுபது என்ற வேறு பெயரும் உண்டு.
- இதன் பாடல்கள் சில சிதைந்து போய் உள்ளன.



**மேற்கோள்:**

**"ஆந்தை குறுங்கலி கொள்ள நம் ஆடவர்**
**காய்ந்து கதிர்தெறூஉம் கானம் கடந்தார் பின்**
**ஏந்தல் இளமுலை ஈர்எயிற்றாய்" என்நெஞ்சு**
**நீந்து நெடுவிடைச் சென்று"**

## இன்னிலை

- ஆசிரியர்: பொய்கையார்.
- களவழி நாற்பதின் ஆசிரியரும் இவரே.
- 45 பாடல்கள் உள்ளன.
- நான்கு பால்கள் கொண்ட நூல், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், வீட்டுப்பால்.
- இதன் வீட்டுப்பால் இல்லியல் துறவியல் என்ற இரு பகுதிகளைக் கொண்டது.

**மேற்கோள்:**

**"ஒத்த உரிமையளா் ஊடற்கு இனியளாக்**
**குற்றம் ஒரூஉம் குணத்தளாக் - கற்றிர்ப்**
**பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து**
**நாணும் தகையளாம் பெண்"**

- பதினெண்கீழ்கணக்கு நூல்களில் நீதி நூல்களின் எண்ணிக்கை 11:
  1. நாலடியார் 2. நான்மணிக்கடிகை 3. இன்னா நாற்பது 4.இனியவை நாற்பது 5.முப்பால் 6. திரிகடுகம் 7.ஆசாரக்கோவை 8. பழமொழிநானூறு 9. சிறுபஞ்சமூலம் 10.முதுமொழிக்காஞ்சி 11. ஏலாதி
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அதிக நூல்களின் எண்ணிக்கை ஆறு (6):
  1.கார் நாற்பது 2. ஐந்திணை ஐம்பது 3. ஐந்திணை எழுபது 4.திணைமொழி ஐம்பது 5.திணைமாலை நூற்றைம்பது 6.கைந்நிலை
- பதினெண்கீழக்கணக்கு நூல்களில் புறநூல் களவழி நாற்பது
- இன்னிலை, கைந்நிலை என்ற இரு நூல்கள் உள்ளன இவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டுமே ஏற்பர்.
- 2010-இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள "மொழித் தமிழ் - இலக்கண இலக்கியங்கள்" என்ற நூலில் கைந்நிலை என்ற நூல் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

This document was created with the Win2PDF "Print to PDF" printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/